"சைவ சித்தாந்தம்"

"நடன குஞ்சிதபாத ஸபை வெளியீடு நெ. 4"

எழுதியவர் :—

புராணரத்னம், உபந்யாஸ சரபம், ஸம்ஸ்க்ருத விசாரதா
C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர்,
நெ. 6, தெற்குஸந்நிதி, சிதம்பரம்.

இரண்டாம் பதிப்பு.

பதிப்பகம்
கிராஸ்வேடு பிரஸ், சிதம்பரம்.
C. 300

விலை] **23—7—1951.** [அணா 4.

"சைவ ஸித்தாந்தம்"

சைவம் என்றால் என்ன? ஸித்தாந்தம் என்றால் என்ன? அதை அடையவேண்டியது எப்படி? என்பதை முக்கியமாக அறியவேண்டும்.

சைவம் என்பது சிவனிடமிருந்து ஸம்பந்தமுள்ளது என்ற பொருளை விளக்குகிறது. ஸித்தாந்தம் என்பது முடிவு செய்ய வேண்டிய அர்த்தத்தை விளக்குகிறது. ஆகவே சிவனிடமிருந்துதான் ஸித்தாந்தமடைய வேணும் என நிச்சய அர்த்தம் அதில் தொனிக்கிறது. அதைப் பற்றி விசாரிப்போம்.

முன்காலத்தில் புராணங்கள் வ்யாஸர் எழுதினர். அதில் "சைவ புராணம்" ஒன்றுள்ளது. அதில் அச்சைவ ஸித்தாந்தத்திற்கு அடைக்கலமாயுள்ள விஷயங்கள் பல அடங்கி உள்ளது. அதைப்பற்றி சொல்லுகிறேன்.

பசு, பதி, பாசம் என்பது சைவ ஸித்தாந்தத்திற்கு நிறைவு விஷயம். அது எவ்விதமெனில்: அத்வைத சித்தாந்தத்திற்கு ஜீவாத்மா, பரமாத்மா என்ற வேற்றுமை. அம்மாதிரியே இதற்கும் வேற்றுமை என்பதை விளக்குகிறது.

அதைப்பற்றி பேசுவோமேயாகில் பசுத்வம் — ஜடம் (முட்டாள் தன்மை) அது நாயகனாக இருந்து இப்பாசம் கட்டுதலடைந்து நற்காரியங்களிலிருந்து அசுத்த காரியங்களை செய்து முட்டாள்தன்மை அடைதல். அதை அடக்கினால்தான் ஸித்தாந்தம் அடையலாம். அதைப்பற்றி விரிவாக விளக்குவோம்.

முன்னாளில் ஒரு ஸமயம் தேவர்கள் முட்டாள் தனமாக இருந்ததால் கர்வமடைந்து பேராசையால் இருந்தனர். மயன் முதலான அஸுரர்கள் கட்டிடங்கள் மூன்று வைத்துக்கொண்டு தேவர்களை ஹிம்ஸை செய்து வந்தனர். அவ்வஸுரர்கள்

கொல்லப்படாத வரம்பெற்று 14 உலகங்களையும் அழித்து வந்தனர். அச்சமயம் தேவர்கள் ஜடத்தன்மை அடைந்து விழித்த ஸமயம் ப்ரம்ஹா முதலியவர்கள் பரமேச்வரனை வேண்டினர். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கி த்ரிபுர ஸம்ஹாரம் புன்சிரிப்பினாலேயே செய்து பரமேச்வரன் அஸுரர்களைக் கொன்றார். அப்பொழுது ஜடத்வத்தை ஈச்வரன் நிவர்த்தித்து அவர்களுக்கு ஜ்ஞானத்தை ஊட்டினர்.

அத்தினம் முதல் பரமேச்வரனுக்கு "பசுபதி" என பெயர் விளங்கலாயிற்று. ஆகவே "பசு-பதி-பாசம்" என்பது இதனின்று விளங்குகிறதை சிவ புராணத்திலிருந்து காணலாம் என்பதை யாவரும் மறுக்க முடியாது.

மேலே யோசிப்போமேயாகில் "பசு-பதி-பாசம்" என்ற சைவஸித்தாந்தத்திற்கு மேற்கோளாக உள்ள முக்ய நூல் "சிவஜ்ஞான போதம்" "மஹா பாஷ்யம்" என்பது அதில் முதல் ஸூத்ரம். 'ஸ்த்ரீபும்-நபும்ஸகாதித்வாத்ஜகத: 'கார்யதர்சனத்' என்று ஆரம்பமாகிறது. அதில் முதலில் ஸ்த்ரீ—என்ற பெயர் இடுகுறியாக அடைந்துள்ளதைப் பார்த்தால் "மாயை என்றர்த்தம்" "பும்—என்பது ப்ரக்ருதி" "நபும்ஸகாதி—பசுத்வம்,, ஆதி—பதத்தால் அஸத் பதங்களை விளக்கும். "கார்யதர்சனத்"—கார்யத்தை கூர்ந்து விபரமாக கூறுதல்.

ஜகத:—என்ற பதம் உலக அளவை வ்ருத்தி அடையக்கூடிய விஷயத்தை தெளிவுரத் தெரிவிக்கிறது. ஆகவே "சிவஞான போதம்" என்ற நூல் தமிழின் பெருமையை விளக்குகிறதோடு அல்லாமல் "பசு-பதி-பாசம்" என்ற மூன்று விஷயங்களையும் தெரியப்படுத்துகிறது.

சைவ ஸித்தாந்தத்தின் முக்யமான கருத்து என்னவெனில்: தெரிந்து ஈசனுக்கு தொண்டு முதலிய கார்யங்களை செய்தலே முக்ய கடமை. அதைத்தான் அது வற்புறுத்துகிறது. சைவ சமய ஆசார்யர்கள் எல்லோரும் இதைத்தான் வற்புறுத்துகிறார்கள், சொல்லியும் உள்ளார்கள். ஆறுமுக நாவலர் என்ற தமிழ் பண்டிதர் அவர் எழுதிய பாலபாடத்தில் "இந்தச் சரீரம் நமக்கு

கிடைத்தது கடவுளை வழிபட்டு முக்தி இன்பம் பெரும் பொருட்டேயாம்" என சொல்லி உள்ளார். அதன்படி உலகத்தில் மானிடப் பிறவியே முக்யமென அறிந்து அதை அடைந்து நாம் ஈசனை வழிபடுதலே முக்ய கருத்தாகக் கொண்டால் முக்தி கண்டிப்பாய் அடையலாம் என்பது கருத்து.

வேதாந்தங்கள் இதைத்தான் வற்புறுத்துகிறது. அதாவது ப்ரக்ருதியிலிருந்து விக்ருதியாகி பின்பு விக்ருதியை அடையாமல் மறுபடி ப்ரக்ருதியாக ஆகிறது என்பது பிறப்பின்மை. (முக்தி அடைதல்) என்பது. ஆகவே வேதாந்த சாஸ்த்ரங்களும், சைவ ஸித்தாந்தமும் இதையே வற்புருத்துகிறது. ஆகையால் ஒவ்வொருவனும் தன் கடமைக்கு எது சொல்லி உள்ளதோ அதை சரிவர நடத்தி அதினின்று முக்தி இன்பமடைந்து நல்லுலகம் அடைதலே நலம். உலகில் ஈச்வரன், மனுஷ்யன்தான் உயரிய குணங்களைப் பெற்று நற்கார்யங்களைச் செய்ய ஹேதுவான குணமடைய முடியும் என, ஸ்ருஷ்டி செய்தார். அதையே பகவத் கீதையில்; பகவான் அர்ஜுனனுக்கு உபதேசிக்கையில் "இந்த சரீரம் எனது துருவமான பதம் அளிக்கவல்லது" என்பதை வற்புறுத்துதல் கொடுக்கிறது என்று சொல்லி உள்ளதைப் பார்த்தால் நன்கு புலப்படுகிறது.

ஆகவே ஈசனது அருளால் மானிட சரீரமடைந்து அவனிடமே செல்வது மிக்க உயர்வே, மநுஷ்யன் அதை அடையத்தான் முயற்சிக்க வேண்டும். வேறு ஒன்றும் கூடாது. மஹரிஷிகள் காலத்தில்கூட அதுவே முக்யமான தர்மம் என கருதி செய்து மோக்ஷபதம் அடைந்தனர் என கூறுகிறது. சாஸ்த்ரம் என்ற பதம் பரிபாலனம் செய்ய அநுமதி அளிக்கிறது. அதைத்தான் கொள்ளுதல் நலம்.

நாம் அடையக்கூடிய புருஷார்த்தங்கள் நான்கு அதில் கடைசிதான் முக்யமுள்ளது. அதற்கு காரணம் தர்மம் மூலமுள்ளது. அதை கடைப்பிடித்து தானும் அதை அடைதலிலே முழு முயற்சி செய்யவேண்டும். "முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" முயற்சித்தால்தான் மேல்ஸ்தானமளிக்க இடமுண்டாகும்.

ஆன்றோர்கள் ப்ராணயாமங்கள் செய்கையில் எவ்வளவோ காலம் செய்து அதன் மூலம் அரும் பெரும் ஸித்திகளையடைய வழி என கண்டுள்ளனர்.

இவ்விஷயங்களை ஜனங்கள் உணர்வது இம்மையிலும், மறுமையிலும் நல்லகுணமடைய வழி. இவ்விதமாக சைவ ஸித்தாந்தம் ப்ரகாசிக்கின்றது இதைப்பற்றி வடமொழி ஆசிரியர் ஸ்ரீகண்டாசாரியார் சைவஸித்தாந்தத்தை அழுத்தமாக நூல் களில் எழுதி உள்ளதை கண்டால் யாவரும் அறிய முடியும். ஆகவே ஈச்வர வழிபாடுகளை அறிந்து நடப்பதே மேலான தர்மம். சைவ ஸித்தாந்தம் ஓங்குக.

மேலும் இன்று நமக்கு அளிக்கப்பட்டுள்ள அவகாசம் எப்படி இருப்பது எனில்; ஊரிலிருந்து வந்துள்ளோம். மறுபடி ஊருக்குப் போகவேண்டும் என சொல்வதை யாவரும் காண் கிறோம். அதுபோல் ப்ரக்ருதி ஊரில் இருந்து வந்துள்ள நாம் இருக்கிறவரை இரவல் உருவமாக இருக்கிறோம். அதற்குள் என்ன செய்யவேண்டுமோ அதை செய்து பூர்த்தி செய்வது முதல் கடமை. முன் ஜன்மங்களில் செய்த புண்ய வசத்தால் சிறிது நேரமாகவாவது தெரிந்து கொள்ளத்தக்க விஷயம் மிக்க மகிழ்ச்சியை தெரிவிக்க ஹேது உள்ளது.

நான் பெரிய மேதாவி இல்லை. இருந்தபோதிலும் சாஸ்த்ரங் களில் சொல்லி உள்ளதை குணமாக தேர்ந்து எடுத்து சொல்ல வேண்டிய கடமை மனுஷ்யனுடையது என்பதாலேயே கூற முன்வந்தது. இயற்கையே நான் சொல்லி முடிவுபெறும் என சொல்ல முடியாது. மரியாதைக்கு சரீரம் அங்கமாக இருக் கிறதே தவிர வேறு இல்லை. ஆகவே ஈச்வரன்தான் சொல்லி முடிவுபெற வேண்டும். ப்ரம்ஹ லோகத்திலேயே பேசி முடிய வில்லை என சொல்லுகிறார்கள். அதைப்பற்றியும் நம்மால் சொல்ல முடியாது. அதுபற்றி கொஞ்சம் விஸ்தரிப்போம்:

ஸமாஜம் என்பது கூட்டம். ஸபை என்பதும் அதுவே. ஆகவே கூட்டம் என்பதற்கு உட்கார்ந்து இருப்பவரும் நிற்கிற வரும் உள்ளதற்கு ஸமாஜம் என பெயர் எழுவது நியாயம். ஈச்வரனது குணங்கள் வேதங்களில் சொல்லுகையில் நாம்

தலைமை அல்ல என்பதை விளக்கி இருக்கிறது. அது எது எனில்; ''சபைக்கும் சபையில் உள்ளவர்களுக்கும் நான் தான் தலைமையாக இருக்கிறேனென்கிறார். எவ்வுயிர்க்கும் காத்தல், அழித்தல், ஸ்ருஷ்டித்தல் இம் மூன்று குணங்களும் எங்கிருந்து என்னிடமில்லாமல் உண்டாக முடியும். ஆகையால் எல்லாவற்றிற்கும் தலைமை நானே. ஆகையால் ஸர்வஸமாஜத்திற்கும் நான் தலைமைவஹித்து நடத்துபவன் என குறிக்கிறேன்'' என்கிறார்.

அதை முதலில் அறியவேண்டும் ''காப்பாற்றுதல் தொழில்களை ஸமாஜத்தில் கேட்பது மூலமாகவும் அதை மற்றவர்களிடம் சொல்லுதல் மூலமாகவும் இவ்விஷயத்தை நான் தெரியப்படுத்தலுக்கு முக்கியமாகக் கருதும் விஷயம் எனவே மனுஷ்யன் பிறந்தால் சொல்லவேண்டும் அறியவேண்டும். ஸத் விஷயங்களை மனனம் செய்யவேண்டும் என்ற குணங்கள் முதலியன பலவகை முக்கியமாக காண்கிறது. அதைத்தான் காது, கண், வாய் சரீரம் முதலிய எண்சாண் உடம்பினல் செய்யத் தகுந்த குண ஹேதுவாக ஈசன் படைத்துள்ளார் என எண்ணி நல் விஷயங்களில் ஈடுபடுவதோடு அல்லாமல் அதற்கு விரோதமன்னியில செய்யவே படைத்துள்ளார் என்பதை அறியவேண்டியது.

நல்ல விஷயங்களைத் தேர்ந்தெடுத்து கூடியவரை ஈச்வரனது க்ருபைக்கு பாத்ரமாகும் விஷயங்களை அடைய குறிப்பாக முற்படவேண்டிய தருணம். இவ்வுலகம் ஸ்ருஷ்டிக்க ஆரம்பிக்கையில் ஈச்வரனல் அளிக்கப்பட்டது. ஸத் அஸத் என்று இரண்டு உண்டாயிற்று. அதினின்று அஸத் கார்யம் நீங்கினல்தான் நற்கதி, மோக்ஷம், க்ஷேமம் ஆகும் என அஸத் விலகியது.

பின்பு ஸத் வேலை செய்ய ஆரம்பித்தது. அதினின்று மானிடப் பிறவி முதலிய 84—லக்ஷம் ஜீவராசிகளும் தோன்றின. அவ்விதம் தோன்றுங்கால் அந்தந்த ஜீவராசிகளுக்கு ஏற்பட்டுள்ள கார்யங்கள் நிறுவப்பட்டு, அளிக்கப்பட்டு, வேலைசெய்ய ஆரம்பித்தன. எவ்விதம் எண்சாண் உடம்பில் சிரஸ் முக்யமோ அம்மாதிரியே ஜிவராசிகளுள் மனுஷ்யன் உயர்வே. சாஸ்த்ரங்கள் அதிலும் பிராம்ஹணன் உயர்வு என்பதும் நிரூபிக்கிறது.

ஏனெனில் கர்மாவின் பலத்தை தான் செய்து மற்ற வர்ணத்தாருக்கு பலரூபமாகவும் அளிக்கவல்லவன் பிராம்ஹணன்.

கர்மாவினுலேயே பிறக்கிருன் என்பதும் அவன், தான் ஸம்பாநித்ததை கொடுக்கவல்லவன். ஏனென்ருல் ஆறுகர்மாக்களுக்கும் அதிகாரமுள்ளவன். ஆனல் அவன் கார்யங்களிலிருந்து ஒரு நாளும் தவறக்கூடாது. அதுதான் பிராம்ஹண தர்மலக்ஷணம். அப்படி செய்து முடிப்பவன்தான் பிரம்ஹலோகம் என்ற பிறப்பற்ற இடம் அடைந்து "துருவ" மஹாராஜனது பதவியை அடைந்தவனுகிருன். ஆகவே விருத்தியடையக்கூடிய பிராம்ஹணஸ்வரூபத்தை அறியத்தக்க சக்தி பிராம்ஹணனுக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்படுகிறது.

அடுத்தது க்ஷத்ரியன். அரசனது குணங்கள் கொடுங்கோன்மையின்றி ராஜ்யத்தை நிர்வாஹங்கள் செய்வது. அதுதான் தர்மம் என நினைத்து செய்து வருவதே அவனது கடமை. அப்படி செய்துவந்தால்தான் காலங்களில் மழை முதலிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு கஷ்டம் அடையாமல் ஜனங்கள் காப்பாற்றப்படும் என்பது அவன் லக்ஷணம். ஆனல் பிராம்ஹணனைப் போல் ஆறுகர்மாக்கள் இல்லாமல் 5-கர்மாக்கள் தான் உண்டு. ஏனெனில் தானம் வாங்க பாத்யம் கிடையாது. பாக்கி குணங்கள் உள்ளதே அதுதான் அவனது தர்மம். ராஜ தர்மம் தான் முக்ய குணம் என அவன் நினைத்து குடிகளை காப்பாற்றவேணும். அரசனது குணங்கள் நிறைவேற்றப்பட்டால்தான் அவனை தர்ம பரிபாலனம் செய்யும் ராஜாங்கம் என போற்ற ஹேதுவாகும். ஆகவே ராஜநீதிகள் ச்ருதி, ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணங்கள் இவைகளில் சொல்லப்பட்டுள்ளது. மிக்க மேன்மையை அடைவிக்கும் என நிரூபிக்கப்படுகிறது. கவனித்தால் நன்கு விளங்கும் இது. விசேஷமாக இவ்விதம் வற்புறுத்தப்படுகிறது.

வைச்ய தர்மங்களைக் கவனிப்போமேயாகில் அவனுக்கு ஏற்பட்ட தர்மங்கள் முக்யமாக காணும், அவனது தர்மம் சூதுவாது இன்றி நியாய லாபத்திற்கு ஸாமான்களை விலைக்கு வாங்கி நியாயத்திற்கு விற்று ஸாமான்கள் மூலம் ஸம்பாதித்த பணம் த்ரவ்யம் முதலியவற்றை ஸத்காரியங்கள், கோயில் கட்டுதல், பிராம்ஹணனுக்கு உபகாரம் செய்தல் முதலிய குணங்கள் தான் முக்யமாகப் ப்ரதானமடைந்து உள்ளது. அதைத்தான் அடைய வழிதேடவேணும். இக்குணங்களைத்தான் முன்னுள்ள

வைச்யர்கள் தாங்கள் செய்துகாட்டி மேன்மை அடைந்து வந்தனர் என புராணங்களில் வர்ணிக்கப்பட்டிருப்பதைக் காண லாம். அத்தர்மங்கள் வைச்யனால் காப்பாற்றப்பட்டால் மிக்க மேன்மையான பதவி கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஸம்பாதிக்கும் பணம் பூராவும் ஈச்வர காரியத்திற்கும், பிராம்மணர்களுக்குமே முக்யமாக அடைந்துள்ளது என நிரூ பித்துள்ளதை நன்றாக உணரவேண்டும். அவ்விதம் உணர்வதே வைச்யனின் முக்ய கடமை. இக்காரணம்பற்றி ஸத்கார்யங் களில் அதிக ச்ரத்தை எடுக்கவேண்டிய பொறுப்பு வைச்ய னுக்கே உள்ளது என்பதை உணரவேண்டும்.

சூத்ர தர்மங்களைப்பற்றி சொல்லுவோமேயாகில் அவனுக்கு அதிக பணி சொல்லப்பட்டுள்ளது. அவனுக்கு தர்மம் என்ன வெனில், ப்ராம்ஹணர்களுக்கும் ஈச்வரனுக்கும் வேலை செய் வதே. ஜன்மாவினால் சூத்ரனாக பிறந்திருப்பினும் அவனுடைய கார்யத்திற்காக ஈச்வரன் திருப்தியடைந்து அவனுக்கு நல்ல உலகங்கள் ஈச்வரனால் அளிக்கப்படுகிறது. அதைப்பற்றி ஒரு இதிஹாஸம் விளக்குவோம்.

ஓர் இடத்தில் ஈச்வர பூஜை ப்ராம்ஹணன் செய்துக்கொண் டிருந்தான். அவ்விடம் தினமும் சூத்திரன் சுத்தம் செய்து இடம் செய்தல், புஷ்பம் கொணர்தல் முதலிய அநேக சுச்ரூஷை கள் செய்துவந்தான். கடைசியில் முத்தி பருவம் வர அப் பொழுது ஈச்வரன் சூத்திரனுக்கு முதல் முக்தியும் பிராம்ஹண னுக்கு பின்பு முக்தியும் கொடுத்தார். அதற்கு ஈச்வரனை கார ணம் கேட்டதற்கு விளக்குகையில் என் பக்தனுக்கு யார் சுச் ரூஷை செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் முதலில் முக்தி யென தெரிவித்தார். ஆகவே ஜன்மாவினால் மட்டமாயிருப்பி னும் உயரிய வகுப்பில் பிறந்தவர்களுக்கு சுச்ரூஷை முதலியன செய்தலால் மிக்க மேன்மைப் பதவி கிடைத்துவிடுகிறது. ஆகவே சூத்ரனுக்கு ஏற்பட்ட தர்மங்கள் ஈச்வரன் பிராம்ஹணன் இவர்களது சுச்ரூஷைதான் முக்யத்வம் வாய்ந்தது என தோன் றுகிறது.

சூத்ரனாகப் பிறந்தவன் அவனது தர்மத்தை சரிவர செய்வா னேயாகில் அடுத்த ஜன்மத்தில் ராஜாவாகவோ, ப்ராம்ஹண

ஞகவோ பிறக்க ஹேதுவாக ஆகிருன் என்பது திண்ணமாக இதினின்று விளங்குகிறது.

ஆகவே நான்கு வர்ணத்தார்களும் அவரவர்கள் தர்மங்களை சரியாக செய்வானேயாஞல் அவனைத்தான் இஷ்டஞக பாவிப் பேன் என பகவான் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிருர். இவ்விஷயங்கள் ஏற்றத்தாழ்வின்றி எல்லோருக்கும் அவரவர்கள் காரியங்கள் முக்கிய ஹேதுவென முடிவு அடையும் என கவ னித்தால் தெரியவரும்.

அதைப்பற்றி ஸ்கந்தரின் பெருமையை தரும் விஷயம் தருகி றேன். உலகில் 33-கோடி தேவர்களுள் ஸ்கந்தர் சிறந்தவர். ஏனெனில் தன் தகப்பனுக்கு ப்ரணவ அர்த்தத்தை விளக்கியவர் "தகப்பன்சாமி" என சொல்லுவதுமுண்டு. மற்றவர்களுக்கு சேஞபதி என பெயர் கிடையாது. யாவரும் அடக்கமுடியாத ஜெயிக்கமுடியாத "தாரகன்" முதலிய அசுரர்களை ஜெயித்து ஜெயக்கொடி நாட்டி இல்லல்களை தொலைத்தவர். அவர் நம் கண் கண்ட தெய்வம். அவரை வணங்குவது முக்ய கடமையாகும். நழுவினவர் என்பதினல் "ஸ்கந்தர்" எனப் பெயர். அப்பதம் விளக்குகிறது. அவ்விதமே அவரது செயல்கள் உயரிய குணங் களாக காணப்படுகிறது. அதன் குணங்களை புராணங்களில் பார்க்கலாம்.

உலகில் முக்யமாக தெய்வ உபாஸனையைப்பற்றி பகவத் கீதையில் சொல்லுகையில் எவன் எவன் எக்காரணம் பற்றி எங் தெந்த மூர்த்தியை உபாஸிக்கிருனே அதுவே நாஞகிறேன். ஆகவே ஒருவன் ஒரு உபாஸனைதான் செய்யவேணும் என்பது கிடையாது. எந்த பாவனையுடன் எதை செய்தாலும் அவனுக்கு நான் உடனே ஸாயுஜ்ய முக்தி பதவியை கட்டாயம் அளிப்பேன் என சொல்லுகிருர். ஆகவே உபாஸனை பேதங்கள் பலவாருக இருந்தபோதிலும் நாம் அதை நினையாது உபாஸித்து பலன் அடையவேண்டும்.

நிற்க உலகில் எம்மதத்தினரும் பிற மதத்தை தூஷிக்காமல் இல்லை. அது பிசகு. தன்னுடைய தர்மம் முக்யமாக உள்ளதே.

வேறு விதமாக நினைத்து பிற மதத்தை தூஷிப்பது மிக்க கொடுமையாக முடியும். ஆபத்தும் உள்ளதே. தூஷணை இன்றி இருத்தலே முக்ய கடமை. தூஷணை செய்வானேயாகில் அவனை மன்னிக்காமல் மிகப்பெரிய நரகங்களில் தள்ள ஹேதுவாகும். ஆனபடியால் நாம் நம் கடமையே முக்ய கார்யம் என கொள்ளல்வேண்டும். "கர்மமே கண்ணாயினர்" என்றபடி அவனுக்கு ஏற்பட்ட கார்யமே மிக்க ப்ரதானம் என கருதல் வேண்டும். இதைத்தான் எல்லா சாஸ்த்ரங்களும் வற்புறுத்துகின்றன. இதைக்கண்டோர், கேட்போர் யாவரும் மறுக்கமாட்டார்கள்.

நிற்க, சிலர் பேசுகையில் வேதம் முதலிய நூல்களுக்கு விரோதமாக நடந்து பேசுதலும், தூஷித்தலும் சுபாவமுள்ளவர்களாக திகழ்கின்றனர். அதினால் அவர்களுக்குத்தான் கெடுதல். கேட்போர் எக்கெடுதலுக்கும் ஆளாகமாட்டார்கள் என்பது தெளிவு. "குற்றம் பார்க்கில் சுத்தம் இல்லை" என்பது பழமொழி அதன்படி வாய்போன வழியில் பேசுதல் என்பதை நான் மிக்க கண்டிக்கிறேன்.

முன்னாளில் மஹரிஷிகள் செய்த கார்யத்தை யாராவது எதிர்ப்பாராகில் கடும் தண்டனை என பெரியோர்கள் சொல்லுகையில் அவ்விதமே பயந்து நடந்துவந்தார்கள். இக்காலத்தில் மாத்ஸர்யம் மேலோங்கி கடும் கார்யமாக வசுதலில் இறங்கி இருப்பது மிக்க வருத்தமே. இப்பேர்ப்பட்ட குற்றங்கள் நிகழாமல் இருத்தல் அதுவே ப்ரசங்க லக்ஷணம் என சொல்லுதல் மிக்க நலம்.

இப்பொழுது சைவ ஸித்தாந்தத்தை சொல்லவேண்டியது முக்ய கடமை. அதை உத்தேசித்து இவ்வளவு விரிவு சொல்லப்பட்டது. அன்றி வேறு இல்லை. ஆகவே, மேலே சொல்லுவோம்.

குஹன் ப்ரணவார்த்தத்தை பரமேச்வரனுக்கு உபதேசிக்கையில் ஓம் அர்த்தம். அகர, உகர மகரங்கள், அகாரம் விஷ்ணு ரூபமாகவும், உகாரம் பரமேச்வர ரூபமாகவும், மகாரம் ப்ரம்ஹ ரூபமாகவும் அடைந்துள்ள அர்த்தத்தை தெரிவிக்கும் மந்த்ரம். ஒரே அக்ஷரத்தில் அடையக்கூடிய ஸித்தி அடைந்துள்ளது.

அதை பரமேச்வரனுக்கு உபதேசித்தது. ஓம் அர்த்தத்தை ஸதா த்யானம் செய்வானேயாகில் அதுவே இன்ப ஸாதன மோக்ஷ நிலையை அடைய சக்தியை தெரிவிக்கிறது.

குஹனே முக்ய பூத ஸாதனங்களுக்கு வேண்டிய அளவை உலகத்திற்கு அருள்மூலம் செய்து கொடுத்து இஹத்தில் இன்ப மடையச் செய்து பரத்தில் மேன்பதம் அளிக்கவல்லவர் என்று புராணங்களிலும் உபநிஷத்துகளிலும் வெகுவாக வரைந்துள்ளதை கண்ணுற்றோர் யாவரும் மறுக்க மாட்டார்கள்.

குஹர் என்ற பதம் குஹ்யமான அர்த்தத்தை உடையது என அர்த்தம் (குஹ்யமானது ப்ரணவ மந்த்ரம்.) அதை அவர் தான் சொல்லவல்லவர் ஆகவே ஓங்காரத்தின் விரிவு உரையை செய்தவராதலால் அவரது பெயரே அதை விளக்குகிறது. உலகத்தில் அடையமுடியாததும் இயலாததுமான வரத்தை தாரக அஸுரன் ப்ரம்ஹதேவரிடமிருந்து அடைகையில் அவர் பதில் அளிக்கையில் அழிவது என்பது திண்ணம் என்றதும் கடைசியாக வரம் கேட்கையில் பரமேச்வரனுக்கு புத்ரன் உண்டாகுமேயானல் அவனல் கொல்லப்படலாம் என கேட்க தாரக அஸுரனுக்கு ப்ரம்ஹன் அவ்விதமே ஸரி என அளித்தார்.

அதாவது உலகில் உண்டாகாது எல்லாம் நாமே என எண்ணி ஏமாற்றமடைய வழியே அது என உலகத்திற்கு காட்டுகிறேன் என உற்பத்தியாகி தாரகனை கொன்ருர். இது குஹனது பெருமை விளங்குகிறது. இதனல் உயர்ந்த தேவர் என்பதை காண்கிருேம்.

பரமேச்வரன், விஷ்ணு ப்ரம்ஹன் மற்ற தேவதைகள் யாவராலும் முடியாது என நினைக்கையில் தனது பராக்ரமமே மேல் என காண்பித்து அஸுரனை கொன்ருர். அதனல் தான் அவருக்கு "ஸேனபதி" என பெயர். வேறு யாவருக்கும் ஸேனபதிஎன பெயர் கிடையாது. ஆகவே குகன், தான் பிறந்த ஏழாவது நாளில் தாரக அஸுரனைக் கொல்லப் புறப்பட்டது மேலானது என புராணங்களிலிருந்து அறியப்படுகிறது.

உலகத்தில் உடனே அநுக்ரஹம் செய்ய சக்திகளுள் குமரன் மிக்க மேன்மை அடைந்தவர். ஆகவே அவரது குணங்

கள் ப்ரகாசித்து விளங்குகிறது. மூர்த்தங்களுள் மிக்க மேன்மையான அவஸரம் முருகன் திருவருள். அதையே நாம் அடைதலுக்கு முக்ய தருணம். அவரது அநுக்ரஹம் மிக்க மேன்மையானதை தரும். பால ரூபமாக அநுக்ரஹ சக்தியை அருளச் செய்து காட்டும் வடிவம். அதுவே அஜ்ஞானத்தை மிக்க ஒழித்து ஞானமடைய வழியைத் தருகிறது. ஆகவே அவாது குணங்கள் நன்கு ப்ரகாசித்து விளங்குகின்றன.

இவ்விஷயத்தில் மேற்கூறிய குணங்கள் நிறம்பிய வடிவத்திற்கு யார் கைங்கர்யம் செய்ய வல்லவர் அவரது குணங்களுக்கு உகந்தாற்போல் செய்யமுடியும் ஜாதி அவன்தான் வைச்யன். அவனுக்கு குணம் உயர்வாக இருக்கவேணும். அதை அறிந்தவன் செய்தால் மேன்மை அடைய வழி உண்டு. அதை வைச்யன் செய்து மிக்க மேன்மை அடைய வல்லவன்; வைச்யனுக்கு என்ன அதிகாரமெனில்; முன் சொல்லியபடி ஸம்பாதிக்கவும், ஸம்பாதித்த பணத்தை ஈச்வரனுக்கும் ப்ராம்ஹணனுக்கும் விநியோகிப்பதுமே அமைந்துள்ள ஸொத்து.

பணம் என்ருல், யாருடையது என நினைத்தால் ஈச்வரனுடைய சொத்து என முடியும். அதை ஈச்வரனுக்கு விநியோகிப்பதில் இருத்தல் மிக்க மேன்மையே. அதை அடைய முற்படவேண்டிய கடமை நான்கு வர்ணங்களில் முக்யமாக வைச்யனுக்கே உள்ளது. ஆகவே அதன் பணியை மேற்கொண்டு நடத்த கொஞ்சமும் மேல் கீழ் பாராமல் சிறப்புற நடத்தி முன் வர வேண்டியவன் வைச்யன். "நாளை நடப்பதை யாரறிவார்" என்றபடி இக்கார்யங்களில் ஈடுபடப் போவதாகவோ, நடக்குமென்ருே கொஞ்ச நாட்களுக்கு முன் யாவரும் அறியமுடியாத் தன்மையை ஈசன் அளித்துள்ளார் என்பதை எல்லோரும் அறிய வேணும். மிக்க புண்யங்களின் பாக்யமே இவ்வுயரிய கைங்கர்யங்களில் மேற்கொள்ளும் தன்மை உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கும். அவனது தர்ம பரிபாலனம் என்ற வர்ணாச்ரம முறை நன்ருக தெரிவிக்கிறது. தவிரவும் ஸ்கந்தருடைய குணங்களுள் இவ்வளவு உள்ளது என ஜனங்கள் அறியாத நிலைமையில் அறியச் செய்யும் புராணங்களில் உள்ள நிகழ்ச்சிகளைப் பார்த்தால் அழியாப் புகழையும் அழியா நிலையையும் விளக்கும்.

அது நற்பதம் அடைய வழியை நினைவூட்டுகிறது என்பது உண்மை தரும். இக்குணங்கள் பொருந்தியவரை ஜனங்கள் ஈடுபடச்செய்தல் எல்லோருடைய பாக்யமே, அதுவும் உண்மையே விளக்கும் பெரும் பெருமை ஸ்கந்தருடையது நாம் போற்றி வழிபட்டால் நன்மை அடைவது நிச்சயம்.

ஆலயம் என்பது எல்லாவிடத்திலும் காண்கிறதை ஒடுக்கச் செய்துள்ள சக்தி என அப்பதம் விளக்கும். அதைக்கண்ணுற்றுலேயே கண்கள் நற்கதிக்குள்ளாகும் என்பதை அது விளக்குகிறது. அதுதான் முக்யம்.

கண்ணைப்பற்றி உபநிஷத்தில் "சாந்தோக்யம்" சொல்லுகையில் கண்ணில் ஓர் புருஷன் இருக்கிறான். அவனை உபாஸித்தால் நற்கதி அடைய ஹேதுஉண்டு என நன்கு வெளிப்படுத்துகிறது. அதை அடைந்து தேடுதல்தான் முக்ய ஸாதனம்.

ஸ்கந்த லீலைகள் அளவற்ற குணங்கள் நிறையப்பட்டு உலகில் நடந்தன. ஸ்கந்த புராணத்தில் அதன் மஹிமையை அறியலாம். உலகில் அவர்தான் கலியுக தைவம் என போற்றுவார்கள். அவரை வழிபடவே இது தருணம்.

அதை உணர்ந்து ஜனங்கள் இம்மையிலும், மறுமையிலும் நல்ல குணமடைய வழி. இவ்விதமாக சைவ ஸித்தாந்தம் பிரகாசிக்கிறது.

சைவ ஸித்தாந்தம் ஓங்க எல்லோரும் அதிகாரம் உள்ளவர்கள். பணி செய்து பதம் அடைவார்களாக!

சுபம்.

C. S. ஸச்சிதானந்த தீக்ஷிதர்,
நெ. 6, தெற்கு ஸந்நிதி, சிதம்பரம்.
23—7—1951.